தடுக்க இதுவரை எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. நிலக்கரியையே – மாசுபடும் நிலக்கரியையே — உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பதையும், அடுத்து இந்தத் தொகுதியில் உள்ள 250 செங்கல் தொழிற்சாலைகளிலுள்ள நிலங்கள் அனைத்தும் அரசு விதிப்படி, கனிம விதிப்படி 5 அடிதான் எடுக்க வேண்டும்; 15 அடிக்குமேல் ஆழம் எடுத்து நன்றாக ஆழப்படுத்தி விட்டார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு மாசு ஏற்படுவதைத் தடுக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேற்றே பதில் சொல்லிவிட்டேன். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரையிலே வந்திருக்கிறது. ஆளுநர் உரையிலே பேசலாம் அதை. (குறுக்கீடுகள்) ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையிலே பேசலாம். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள், உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(அ) பொதுக் கணக்குக் குழு—தொடர்ச்சி

திரு. கே.என். இலட்சுமணன்: 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் (குறுக்கீடுகள்) இருநூற்று எழுபத்து மூன்றாவது முதல் இருநூற்று எண்பத்து மூன்றாவது வரையிலான (குறுக்கீடுகள்) 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்)

4. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? என்ன? துரைமுருகன் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநிலத்தில் அந்த அரசு ஒரு அணையைக் கட்டப்போவதாகச் செய்தி வெளியாகியிருந்தது. அது மிகப்பெரிய ஒரு பிரச்சினையை வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலே உருவாக்கிவிடும். பாலாறு சஹாராவாகக்கூடிய நிலைமை உருவாகிவிடும், விவசாயிகள் மத்தியிலே பீதி ஏற்பட்டு பல இடங்களில் ஆர்பாட்டங்களை நடத்தினார்கள். இதுகுறித்து அந்த அரசுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். பல விவசாயச் சங்கங்கள் சார்பிலே தந்திகள் அனுப்பியிருக்கிறோம். பல இடங்களிலே ஆர்பாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு வந்த செய்தி,